







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி**


**மலர் 1 இதழ் 43 22.10.2025**



**ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:**

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்



# முத்துக்கள்

- ஒருவன் நித்ய நைமித்திக கர்மாக்களை நிச்சயம் அனுஷ்டிக்க வேண்டும்.
- நித்ய கர்மாக்களானவை தினம் தினம் செய்ய வேண்டிய ஸந்த்யா வந்தனம் போன்றவை.
- நைமித்திக கர்மாக்களானவை குறிப்பிட்ட காலங்களில் அவஸ்யம் அநுஷ்டிக்கப்பட வேண்டியவை; அதாவது க்ரஹண காலங்களில் செய்ய வேண்டிய தர்ப்பணம் முதலியவை. தர்ப்பணம் என்று வரும்போது தர்ஸ ஸ்ராத்த தர்ப்பணமானது அவஸ்யம் அமாவாசை தினத்திலேயே அநுஷ்டிப்பதால் இதனை நித்யம் என்று சொல்லப் படுகிறது. ஸங்கரமண ஸ்ராத்த தர்ப்பணமானது எந்தத் திதியில் வரும் என்பது நிரந்தரமில்லை. எனவே, இந்த மாஸ தர்ப்பணத்தை நைமித்திகம் என்று சொல்வதுண்டு.
- அநுஜ்ஞா கைங்கர்யங்களாவன - திருக்கோவில்களுக்குச் சென்று பகவானை ஸேவிப்பது, பகவானுக்குக் கைங்கர்யம் செய்வது. பாகவதர்களுக்கு கைங்கர்யம் செய்வது போன்றவை. இத்யாதியாக பலவிதமான கர்மாக்கள்.

********************************************************************************

**ஞானயோகம்** - இது ஞான யோகத்தைக் குறிக்கும்.

- மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுக்களுக்கு தேவையானது என்னவென்றால் இது ஒருவிதமான ஜ்ஞான மலர்ச்சியாகும். இதுதான் உபாயம். உபாயமாக இருக்கின்ற ஜ்ஞான மலர்ச்சியானது இந்த்ரியங்களை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த ஜ்ஞான மலர்ச்சியான உபாயம் முலமாக அடைய வேண்டிய வஸ்துவானது உபேயம். உபேயம் என்பது மற்றொரு ஜ்ஞான மலர்ச்சி. உபேய ஜ்ஞான மலர்ச்சியானது, ஞானேந்த்ரியங்களின் உதவியின்றி இயங்குவது. ஜீவாத்மாக்களுக்கு இந்த ஜ்ஞான மலர்ச்சியானது இயற்கையாகவே உள்ளது. அந்த ஜ்ஞான மலர்ச்சியின் இலக்கானது ப்ரஹ்மத்தை அடைவதாகும்.

மேலும் ஞானயோகம் என்பது:

- ஜீவாத்மாவானது சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்றறிதல்.
- ஜீவாத்மாவானது இந்த்ரியங்கள், மனம், ப்ராணன் ஆகியவற்றைக் காட்டிலும் வேறானது என்றறிதல்.
- ஜீவாத்மா, ப்ரக்ருதி, மற்றும் உண்டான பொருட்கள் அனைத்திலும் எம்பெருமான் ஆத்மாவாக இருக்கிறான் என்று அறிதல்.
- எப்பொழுதும் யஜமானனான எம்பெருமானை த்யானித்தல்.
- இவ்வாறான ஜ்ஞான யோகத்தை அனுஷ்டித்தாலும் நித்ய நைமித்திக கர்மாக்களை விடாது செய்ய வேண்டும்.

********************************************************************************

- நாம் அடைய வேண்டிய வஸ்துவானது படைத்து அழித்துக் காக்கும் எம்பெருமானின் திருவடி நிழல்.
- நாம் எம்பெருமானின் உடைமை. அவனிலிருந்து தோன்றியவர்கள். ஸ்வதந்த்ரனல்லன். அவனுக்கு அடிமை என்ற ஸ்வரூபம் /ஸ்வபாவம் உள்ளனவாய் இருத்தல்.
- மோக்ஷ பதவி அல்லது பரமபதம் அல்லது எம்பெருமானின் திருவடி நிழல் நாம் அடைய வேண்டியிருந்தாலும், அதை அடைய முடியாதபடி நம்மைத் தடுக்கும் கர்ம வினைகள்.
- அதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய பக்தி அல்லது ப்ரபத்தி உபாயங்கள்.
- அவ்வாறான அனுஷ்டானத்தால் நமக்குக் கிடைக்கும் பெறும் பேறான பரமபதம்.

********************************************************************************

- இதில் ஈஸ்வரன் எனும் பரமாத்மா ஜீவாத்மாவாக சேதந் அசேதங்களில் பரிமளிக்கிறது. சேதந அசேதனங்கள் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் சரீரம்.
- சேதந அசேதனங்கள் பரமாத்மாவுக்கு அடிமை.
- சேதனர்கள் சயங்கொள்ள வேண்டிய இடம் பரமாத்வான எம்பெருமானின் திருவடி. அதாவது பரலோகமான பரமபதம்.
- சித் - பத்தர் முத்தர் நித்யர் அகியோர்

- அசித் - ப்ரக்ருதி,நித்ய விபூதி, காலம் ஆகியவை
- ஈஸ்வரன் -பரமாத்மாவான ஸ்ரீய:பதி ஸ்ரீலக்ஷ்மீ நாராயணன்.

1. மேற்சொன்ன பரலோகமானது நித்யமானது. ஒளி மயமானது. ஆனந்த மயமானது. அதில் முத்தர்கள் பக்தி அல்லது ப்ரபத்தி மார்கத்தால் மோக்ஷ நிலையை அடைந்து முமுக்ஷுக்களாக பரிமளிக்கின்றனர்.

2. பத்தர் எனப்படுபவர் இந்நிலவுலகில் பக்தி மார்க்கத்தில் திளைத்து சுத்தர்களாக பரிமளிப்பவர்கள்.

3. நித்யர் எனப்படுபவர் (அநந்தன், கருடன் போன்றோர்) பரலோகத்தில் நித்யவாஸம் செய்கிறார்கள். அவர்களுக்கு பிறப்பு இறப்பு இல்லை.

*****************************************************************************

**பஞ்சமுத்தி:**

**1.பரம்**- பரலோகத்தில் எம்பெருமான் ஸ்ரீவாஸுதேவனாய், ஸ்ரீலக்ஷ்மீ நாராயணனாய்த் திகழ்கிறான். இது முதல் நிலை.

**2. வ்யூஹம்** - அந்த ஸ்ரீபரவாஸுதேவன் தனது ஸ்வரூபத்தை ஐந்து பரிமாணமாக விளங்கச் செய்கிறான். அதாவது பரம், வ்யூஹம், விபவம், ஹார்த்தம், அர்ச்சை என்பதாக. இது இரண்டாம் நிலை.

- ✓ பரம் என்றால் பரமபதத்தில் வீற்றிருக்கும் பரவாஸுதேவன். பரம்பொருள். ஸர்வேஸ்வரன்.
- ✓ வ்யூஹம் என்பது நான்கு நிலை. பரவாஸுதேவனானவன் - வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன், என்ற நான்கு நிலைகளில் விளங்குகிறான்.
- ✓ மேலும் வாஸுதேவ நிலையானது - கேஸவம், நாராயணம், மாதவம் என்ற மூன்று மூன்று திரு நாமங்களில் பரிமளிக்கிறது.
- ✓ ஸங்கர்ஷண நிலையானது கோவிந்தம், விஷ்ணு, மதுஸூதனம் என்ற மூன்று திருநாமங்களில் பரிமளிக்கிறது.

- ✓ ப்ரத்யும்நன் என்ற நிலையானது - த்ரிவிக்ரமம்,வாமனம், ஶ்ரீதரம் என்ற மூன்று திருநாமங்களில் பரிமளிக்கிறது.
- ✓ அநிருத்தன் என்ற நிலையானது -ஹ்ருஷீகேஸம், பத்மநாபம், தாமோதரம் என்ற மூன்று திருநாமங்களில் பரிமளிக்கிறது.
- ✓ இப்படியாக பரவாஸுதேவன் எனும் பரமாத்மா - நான்கு வ்யூஹ நிலைகளில், த்வாதஸ (12) திருநாமங்களில் பரிமளிக்கிறான்.

**3. விபவம்** - அடியார்க்கு அருள வேண்டி எம்பெருமான் தஸாவதார மாக, விபவ அவதாரங்கள் எடுத்து ரக்ஷிக்கிறான். ஆனால், விபவத்தில் கூடியிருந்தோர் மட்டுமே அவனை அனுபவிக்க முடியும். இது மூன்றாம் நிலை.

**4.ஹார்த்தம்** - நேரடியாக அருள வேண்டுமாய் ஜீவர்களின் ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாய், அணுப்பரிமாணமாய், ஸூக்ஷ்மமாய், பரிமளிக்கிறான். இது நான்காவது நிலை.

**5. அர்ச்சை** - இவ்வாறான ப்ரம், வ்யூஹம், விபவம், ஹார்த்தம் என்ற நான்கு நிலைகளில் எம்பெருமானை நாம் நம்முடைய புறக்கண்களால் காண முடியாது. எனவே, அடியார்க்கிரங்கி, திவ்ய தேங்களிலும், மற்ற திருக்கோவில்களிலும் அர்ச்சா மூர்த்தியாய் ஸேவை ஸாதித்து அருளுகிறான். இது ஐந்தாவது நிலை.

இப்படிப் பஞ்சமுத்தியாய் பரிமளிக்கிறான் எம்பெருமான். இப்படியாகத்தத்வத்ரயங்களில் மூழ்கி எம்பெருமானின் ஸ்வரூபங்களை அகக்கண்ணாலும், புறக்கண்ணாலும் தரிசித்து, சரணாகதி செய்தவாறு முத்தர்களில் நிலைமையை நாமும் அடைய வேண்டும். அதற்கு ஸ்வாமி தேஸிகன் அநுக்ரஹிக்க வேண்டும்.

